TNPSCJOB



# செலக்சன்

## 6 சமூக அறிவியல் 5/1

## இரண்டாம் பருவம்

### வரலாறு

### அலகு 1. வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்

**பயிற்சிகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆரியர்கள் முதலில் .............. பகுதியில் குடியமர்ந்தனர்**

அ)பஞ்சாப்

ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி

இ) காஷ்மீர்

ஈ) வடகிழக்கு

**விடை : அ) பஞ்சாப்**

**2. ஆரியர்கள் .............. லிருந்து வந்தனர்**

அ) சீனா ஆ) வடக்கு ஆசியா

இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா

**விடை : இ) மத்திய ஆசியா**

**3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்".............. லிருந்து எடுக்கப்பட்டது**

அ) பிராமண ஆ) ஆரண்யகா

இ) வேதம் ஈ) உபநிடதம்

**விடை : ஈ) உபநிடதம்**

**4. வேத காலத்தில் என்ன விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது ?**

அ) 1/3 ஆ) 1/6

இ) 1/8 ஈ) 1/9

**விடை : ஆ) 1/6**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று :** வேதகாலம் குறித்து கற்க அதிகஅளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

**காரணம் :** நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றுக்கான சரியானவிளக்கமே

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றுக்கான சரியானவிளக்கமல்ல

இ) கூற்று சரி; காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ; காரணம் சரி

**விடை : ஈ) கூற்று தவறு ; காரணம் சரி**

---

**2. கூற்று 1 :** தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அதன்மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.

**கூற்று 2 :** இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.

அ) கூற்று 1 தவறானது

ஆ) கூற்று 2 தவறானது

இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை

ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை

**விடை : இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை**

---

**3. வேதகால சமூகம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது ?**

அ) ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்

ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது

இ) தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்

ஈ) உடன்கட்டை ஏறுதல் தெரியாது

**விடை : ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது**

---

**4. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது ?**

அ) கிராமா < குலா < விஷ் < ராஸ்டிரா < ஜனா

ஆ) குலா < கிராமா < விஷ் <ஜனா <ராஸ்டிரா

இ) ராஸ்டிரா < ஜனா < கிராமா < குலா <விஷ்

ஈ) ஜனா < கிராமா < குலா <விஷ் <ராஸ்டிரா

**விடை : ஆ) குலா < கிராமா < விஷ் <ஜனா <ராஸ்டிரா**

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வேதப்பண்பாடு .............. இயல்பைக் கொண்டிருந்தது.

**விடை : ரத்த உறவுகளின்**

2. வேதகாலத்தில் மக்களிடமிருந்து .................. என்ற வரி வசூலிக்கப்பட்டது.

**விடை : பாலி**

3. .................... முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும்.

**விடை : குருகுலக் கல்வி**

4. ஆதிச்சநல்லூர் ..................... மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**விடை : தூத்துக்குடி**

---

**IV. சரியா ? தவறா ?**

1. பல இடங்களில் கிடைத்துள்ள ரோமானியத் தொல் பொருட்கள் இந்திய–ரோமானிய வணிக உறவுகளுக்குச் சான்றுகளாய் உள்ளன

**விடை : சரி**

2. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும் **விடை : சரி**

3. படைத்தளபதி "கிராமணி" என்றுஅழைக்கப்பட்டார்

**விடை : தவறு**

4. கரும்பு மற்றும் சிகப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும். **விடை : சரி**

5. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. **விடை : சரி**

---

**V. பொருத்துக :**

| | | |
|---|---|---|
| அ) கீழடி | – | 1. பகடை |
| ஆ) பொருந்தல் | – | 2.கொழுமுனைகள் |
| இ) கொடுமணல் | – | 3.சுழல் அச்சுக்கள் |
| ஈ) ஆதிச்சநல்லூர் | – | 4. தங்க ஆபரணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| அ) 4 | 3 | 2 | 1 |
| ஆ) 3 | 4 | 1 | 2 |
| இ) 1 | 3 | 4 | 2 |
| ஈ) 1 | 2 | 3 | 4 |

**விடை : ஈ) 1 2 3 4**

---

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி:**

**1. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**விடை :** ரிக், யஜுர், சாம, அதர்வன

---

**2. வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை ?**

**விடை :** 1. பசு, 2.வெள்ளாடு,3.செம்மறியாடு, 4.குதிரை, 5.யானை

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. பெருங்கற்காலம் பற்றி நீங்கள் அறிந்தது என்ன ?**

**விடை :** இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடிய அக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

**4. "கற்திட்டைகள்" என்பது என்ன ?**

**விடை :** இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறமும் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின் மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும். அவற்றினை கற்திட்டைகள் என்கிறோம்.

**5. முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன ?**

**விடை :** இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண்பானைகள் முதுமக்கள்தாழிகள் எனப்படும்.

**6. வேதகாலத்தில் வணிகப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் பெயர்களைக் கூறுக ?**

**விடை :** 1. நிஷ்கா, சத்மனா என்னும் தங்க நாணயங்கள், 2.கிருஷ்ணாலா என்னும் வெள்ளி நாணயங்கள்.

**7. தமிழ்நாட்டில் காணப்படும் பொற்கால நினைவுச் சின்னங்களின் பெயர்களைக் கூறுக ?**

**விடை :** 1. கற்திட்டைகள் 2. நினைவுக் கற்கள், 3. நடுகல்

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி :**

**1. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்துச் சுருக்கமாய் எழுதுக.**

* பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள கொடுமணல் என்னும் ஊரில் தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுக்கும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

* நூல் சுற்றி வைக்கப்பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள்ஆகியவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

* புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக் கல்(Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது

**2. வேதகாலப் பெண்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.**

**வேதகாலப் பெண்கள் நிலை:**

* பெண்கள் ஓரளவிற்குச் சுதந்திரம் பெற்றிருந்தனர்.
* மனைவி குடும்பத்தின் தலைவியாக மதிக்கப்பட்டார்.
* பெண்கள் தனது கணவருடன் தனது வீட்டில் சடங்குகள் நடத்தினர்.
* குழந்தைத் திருமணத்தையும் உடன்கட்டை ஏறுதலையும் அறிந்திருக்கவில்லை.
* கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ளத் தடைகள் இல்லை.
* பெற்றோரிடமிருந்து பெறும் சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பெண்கள் பொது நிகழ்வுகளில் எந்தப் பங்கும் வகிக்கவில்லை.

TNPSCJOB



**VIII. உயர்சிந்தனை வினா :**

**1. குருகுலக் கல்வி முறைக்கும் நவீன கல்வி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?**

| குருகுலக் கல்வி முறை | நவீன கல்வி முறை |
|---|---|
| * குருகுலக் கல்வி முறையில் மாணவர்கள் ஆசிரியரின் வீட்டிற்கு சென்று படிக்கவேண்டும் | * மாணவர்கள் இருக்கும் இடத்திற்கு ஆசிரியர்கள் வந்து பாடம் நடத்த வேண்டும் |
| * வாய்மொழி மரபில் மாணவர்கள் பாடங்களைக் கற்றனர் | * எழுத்து வடிவிலும் வாய்மொழியிலும் கற்கின்றனர் |
| * குறிப்பிட்ட பிறப்பாளர்களுக்கு மட்டுமே கல்வி வழங்கப்பட்டது | * அனைவருக்கும் கல்வி என்பது அடிப்படை உரிமை ஆகும் |
| * பெண்களுக்கு கல்வி அளிக்கப்படவில்லை | * இன்று பெண்களே கல்வியில் சிறந்து விளங்குகின்றனர் |

**IX. பெருமிதமும் மகிழ்ச்சியும் – உண்மைகளை நாம் கண்டறிவோம்**

| **தொல்பொருள் ஆய்விடங்கள்** | **தொல்லியல் கண்டுபிடிப்புகள்** | **உண்மைகள்** |
|---|---|---|
| ஆதிச்சநல்லூர் | தமிழ்–பிராமி எழுத்துக்கள் | வரலாற்றுக்கு முந்திய பண்பாடு இருந்துள்ளது |
| கீழடி | ரோமானிய தொல் பொருட்கள் | இந்தியாவிற்கும் ரோமானியத்திற்கும் இடையே நிலவிய வணிகம் |
| பையம்பள்ளி | இரும்புக்கருவிகள் | இரும்பு உருவாக்கும் தொழிற்சாலை |
| பொருந்தல் | அரிசி நிரப்பப்பட்ட பானை | தமிழக மக்களின் முக்கிய உணவு அரிசி |
| கொடுமணல் | சுழல் அச்சுக்கள் | ஆடை உருவாக்கும் ஆலை |

**X. மாணவர் செயல்பாடு :**

**1. புதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குதல்.**
**சுருதி, கிராமணி, ராஷ்ட்ரா, இரும்புக் காலம், நாடோடிகள், பண்டமாற்று**

* கேள்விகள் கேட்கப்பட முடியாத உண்மைகள் **சுருதி** ஆகும்.
* கிராமத்திற்கு **கிராமணி** தலைவர் ஆவார்.
* ரிக்வேத காலத்தில் பல இனக்குழுக்கள் **ராஷ்ட்ரா** எனப்பட்டன.
* வேதகாலம் **இரும்புக் காலம்** என அழைக்கப்பட்டது.
* நாடோடிகள் – ஆதிமனிதன் **நாடோடிகளாக** வாழ்ந்தான்
* பழங்காலத்தில் **பண்டமாற்று** முறை பின்பற்றப்பட்டது.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. வார்த்தை விளையாட்டு:**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | மி | ச | ரி | சு | பௌ | த | இ | ஸ |
| ச | இ | த | ம | ம் | க் | ஸ் | ரு | பா |
| அ | டை | ட் | தி | ற் | க | க | ம் | ங் |
| ந | பு | ள் | ம | ண | ம் | மா | பு | ச |
| ஸ் | ம | கை | ப | ர் | ங் | மெ | க் | த் |
| க | மி | ர | ணி | ஸ் | வி | ரா | கா | ம |
| ல் | கா | ரு | யா | சே | த | ர் | ல | னா |
| ய | கௌ | ர் | தி | ஷ் | வெ | னா | ம் | ளி |
| ஸீ | க | ணா | டி | தி | பு | ப் | ரு | நெ |

**விடை :**

1. ஒரு கணவாய் – **கைபர்**
2. மத போதனையைக் கொண்ட நூல் – **ஸ்மிருதி**
3. கிராமங்களின்தொகுதி– **விஸ்**
4. இனக்குழு மன்றம் – **கணா**
5. மக்கள் மன்றம் – **சமிதி**
6. அக்னி – **நெருப்பு**
7. தங்க நாணயம் – **சத்மினா**
8. வேதகாலம் – **இரும்புக் காலம்**
9. இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னம் –**கற்திட்டை**

## XI. வாழ்க்கைத் திறன்

**ஆசிரியரின் உதவியோடு செய்தித்தாள் களிலிருந்து தொல்லியல் கண்டுபிடிப்புகள் குறித்த செய்திகளைச் சேகரிக்கவும்.**

மதுரையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் கீழக்குயில் குடி கிராமத்தில் சமணர் மலை என்ற பெயரில் ஒரு குன்று உள்ளது.

**கல்வி சுற்றுலா : நீங்கள் இருக்கும் இடத்திற்கு அருகேயுள்ள தொல்லியல் சார்ந்த ஓர் இடத்திற்குச் சென்றுவரவும்.**

மதுரையிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள துரிட்டாபட்டி என்ற கிராமத்தில் கலிஞ்சமலை உள்ளது. அங்கு சமணர் குகைகள் உள்ளன.

## XII. கட்டக வினாக்கள் :

| | | |
|---|---|---|
| இரண்டு இதிகாசங்களைக் குறிப்பிடவும். **விடை : 1. இராமாயணம் 2. மகாபாரதம்** | இறந்தவரின் நினைவாக நடப்படும் ஒற்றைக் கல் தூணின் பெயர். **விடை : நினைவுக் கற்கள்** | சிவகங்கை மாவட்டத்திலுள்ள சங்க காலத்தைச் சேர்ந்த நகரத்தின் பெயர். **விடை : கீழடி** |
| தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது இரண்டு இரும்புக்கால வாழ்விடங்களின் பெயர் களைக் கூறுக. **விடை : 1. பொருந்தள் திண்டுக்கல் மாவட்டம் 2. கொடுமணல் ஈரோடு மாவட்டம்** | தொடக்கால ஆரியர்கள் பின்பற்றிய வேளாண் முறை என்ன ? **விடை : அழித்து எரித்து சாகுபடி செய்யும் முறை** | வேதகாலத்தில் உருவான இரண்டு பெரிய நகரங்களின் பெயரென்ன ? **விடை : 1. அயோத்தி 2. மதுரா** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## புவியியல்

## அலகு 1. வளங்கள்

### பயிற்சிகள்

**அ) பொருத்துக.**

| அ | ஆ |
|---|---|
| 1. இயற்கை வளம் | கனிமங்கள் |
| 2. பன்னாட்டு வளம் | நிலையான வளர்ச்சி |
| 3. குறைத்தல், மறு பயன்பாடு , மறுசுழற்சி | காற்று |
| 4. புதுப்பிக்க இயலாதது | உற்பத்தி செய்தல் |
| 5. உலகளாவிய வளம் | திமிங்கலப் புனுகு |
| 6. இரண்டாம் நிலை செயல்பாடுகள் | காடு |

| அ | ஆ |
|---|---|
| **1. இயற்கை வளம்** | **காடு** |
| **2. பன்னாட்டு வளம்** | **திமிங்கலப் புனுகு** |
| **3. குறைத்தல், மறு பயன்பாடு , மறுசுழற்சி** | **நிலையான வளர்ச்சி** |
| **4. புதுப்பிக்க இயலாதது** | **கனிமங்கள்** |
| **5. உலகளாவிய வளம்** | **காற்று** |
| **6. இரண்டாம் நிலை செயல்பாடுகள்** | **உற்பத்தி செய்தல்** |

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கரும்பிலிருந்து ................. தயாரிக்கப்படுகிறது.
**விடை : சர்க்கரை**

2. வளங்களை ............. கையாளுதல் வளங்களின் பாதுகாப்பு எனப்படுகிறது. **விடை: கவனமாக**

3. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் .................. எனப்படுகிறது.
**விடை : உள்ளூர்**

4. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் ................. வளங்கள் என்று அழைக்கப்படுகிறது. **விடை : கண்டுபிடிக்கப்பட்ட**

5. ................... வளம் மிகவும் மதிப்பு மிக்க வளமாகும். **விடை : மனித**

6. இயற்கை வளங்களைச் சேகரித்தல் ................. எனப்படுகிறது.
**விடை : முதல்நிலைத் செயல்பாடு**

**இ) சிறுகுறிப்பு வரைக.**

**1. புதுப்பிக்க கூடிய வளங்கள்**

ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும் தன்மையுடைய வளங்கள், புதுப்பிக்கக்கூடிய வளங்கள் எனப்படும்.

எ.கா : காற்று, நீர், சூரிய ஒளி.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. மனித வளம்**

இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் மனித வளம் எனப்படும்.

எ.கா. மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

**3. தனிநபர் வளம்**

ஒரு தனி நபருக்கு மட்டுமே சொந்தமானவை தனிநபர் வளம் எனப்படும்.

எ.கா : அடுக்குமாடிக் கட்டடங்கள்

**4. மூன்றாம் நிலை செயல்பாடுகள்**

முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையில் கிடைக்கப்படும் பொருள்களைப் பகிர்வதற்கான போக்குவரத்து மற்றும் வணிக அமைப்பே மூன்றாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.

எ.கா : வங்கி, வணிகம், தகவல் தொடர்புத்துறை.

**ஈ) மிகச் சுருக்கமாக விடையளி.**

**1. வளங்கள் என்றால் என்ன ?**

மனிதனின் தேவையை நிறைவு செய்யும் எந்தவொரு பொருளும் வளமாகும்.

**2. கண்டறியப்பட்ட வளங்கள் என்றால் என்ன ?**

தற்போது பயன்படுத்தப்படுவதும் அதன் இருப்பின் அளவும் அறியப்பட்டிருக்கும் வளங்கள் கண்டறியப்பட்ட வளங்கள் எனப்படும்.

எ.கா : நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

**3. உயிரற்ற வளங்களை வரையறு.**

உயிரில்லாத அனைத்து வளங்களும் உயிரற்ற வளங்கள் எனப்படும். எ.கா : நிலம், நீர், காற்று, கனிமங்கள்.

**4. நிலையான வளர்ச்சி என்றால் என்ன ?**

நிகழ்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினருக்கும் போதுமான வளங்களை விட்டு வைத்து, சமநிலைத் தன்மையோடு ஏற்படும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி எனப்படும்.

**உ) சுருக்கமாக விடையளி.**

**1. உலகளாவிய வளங்கள் மற்றும் உள்ளூர் வளங்களை வேறுபடுத்துக.**

| உலகளாவிய வளங்கள் | உள்ளூர் வளங்கள் |
|---|---|
| உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும். | ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படும். |
| எ.கா. சூரிய ஒளி, காற்று | எ.கா. கனிமங்கள் |

TNPSCJOB



**2. மனிதன் ஒரு இயற்கை வளம், ஆனால் மனிதன் மட்டுமே ஒரு தனி வளமாக கருதப்படுவது ஏன் ?**

மனிதன் ஒரு மதிப்பு மிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம். அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு திறன்.

எ.கா. மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

**3. நாட்டுவளம் மற்றும் பன்னாட்டு வளம் – ஒப்பிடுக.**

| நாட்டு வளம் | பன்னாட்டு வளம் |
|---|---|
| ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிகள் மற்றும் பெருங்கடல் பகுதிகளுக்கு உட்பட்ட வளங்கள் ஆகும். | எந்த ஒரு நாட்டின் எல்லைக்கும் உட்படாத மிகப்பரந்த திறந்த வெளி பெருங்கடல் பகுதியில் காணப்படும் வளங்கள் ஆகும். |
| எ.கா. இந்தியாவின் வெப்ப மண்டல மழைக்காடுகள். | எ.கா. திமிங்கலப் புனுகு. |

**4. மனிதன் உருவாக்கிய வளத்திற்கும், மனித வளத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

| மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் | மனித வளம் |
|---|---|
| இயற்கை வளங்கள் தொழில் நுட்பத்தினால் மாற்றுருவாக்கம் செய்யப்பட்டு, புதிய பொருள் களாக பெறப்பட்ட வளங்கள் ஆகும். | இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் ஆகும். |
| எ.கா.கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை, மனிதனால் உருவாக்கப்பட்ட பாலங்கள், வீடுகள், சாலைகள். | எ.கா. மனிதன் ஒரு இயற்கை வளம் மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர். |

**5. வளப்பாதுகாப்பைப் பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன ?**

**வளப்பாதுகாப்புப் பற்றி காந்தியடிகளின் கூற்று :**

1. வளங்கள் மிகுதியாக எடுக்கப்படுகின்றன.
2. மனிதத் தேவைகளும் எல்லையை மீறுகின்றன.
3. ஆகவே, மனிதன் நினைத்தால் மட்டுமே வளங்கள் பாதுகாக்கப்படும்.

TNPSCJOB



**ஊ) விரிவாக விடையளி (100 – 120 வார்த்தைகள் வரை)**

**1. இயற்கை வளங்களை வகைப்படுத்துக. ஏதேனும் மூன்றினை விவரித்து உதாரணத்துடன் விளக்குக.**

**1. இயற்கை வளங்கள் :** இயற்கையிலிருந்து நேரடியாகப் பெறப்படும் அனைத்து வளங்களும் இயற்கை வளங்கள் எனப்படும்.

எ.கா : காற்று, நீர், மண், கனிமங்கள், இயற்கைத் தாவரங்கள், விலங்குகள்.

**இயற்கை வளங்களின் வகைப்பாடு :**

இயற்கை வளங்களை அதன் தோற்றம், வளர்ச்சிநிலை, புதுப்பித்தல், பரவல் , உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

**தோற்றத்தின் அடிப்படையில் :**

தோற்றத்தின் அடிப்படையில், வளங்களை உயிரியல் வளங்கள் , உயிரற்ற வளங்கள் என வகைப்படுத்தப்படுகிறது.

i)உயிருள்ள அனைத்தும் உயிரியல் வளங்கள் எனப்படும்.

எ.கா. தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகள்.

ii) உயிரில்லாத அனைத்து வளங்களும் உயிரற்ற வளங்கள் எனப்படும்.

எ.கா. நிலம், நீர், காற்று, கனிமங்கள்.

**வளர்ச்சியின் அடிப்படையில் :**

வளர்ச்சி நிலையின் அடிப்படையில் வளங்களை கண்டறியப்பட்ட வளங்கள் மறைந்திருக்கும் வளங்கள் என்று வகைப்படுத்தப்படுகிறது.

i)கண்டறியப்பட்ட வளங்கள் தற்போது பயன்படுத்தப்படுவதும் அதன் இருப்பின் அளவும் அறியப்பட்டிருக்கிறது.

எ.கா. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்

ii) மறைந்திருக்கும் வளங்கள் என்பது தற்பொழுது அதிக பயன்பாட்டில் இல்லாததும், அதன் அளவு மற்றும் இருப்பிடம் அறியப்படாமல் இருப்பதாகும்.

எ.கா. வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலில் காணப்படும் கடல் ஈஸ்ட்.

**புதுப்பித்தலின் அடிப்படையில் :**

வளத்தினை புதுப்பித்தலின் அடிப்படையில் புதுப்பிக்கக்கூடிய வளங்கள், புதுப்பிக்க இயலா வளங்கள் என வகைப்படுத்தப்படுகிறது.

i)ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் . பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும். தன்மையுடைய வளங்கள் புதுப்பிக்கக் கூடிய வளங்கள் என அழைக்கப்படுகின்றன.

எ.கா. காற்று, நீர், சூரிய ஒளி.

ii) குறிப்பிட்ட அளவில் உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். இவ்வளங்கள் பயன்பாட்டிற்குப் பின்பு தீர்ந்து போகக் கூடியவையாகும்.

எ.கா. நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கைவாயு, கனிமங்கள்.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2.வளங்களைப் பாதுகாப்பது எப்படி ?**

**வளங்களைப் பாதுகாத்தல் :**

i.வளங்கள் குறைந்து கொண்டு வருவதற்கான காரணங்களை அறிதல்.

ii. வீணாக்குதலையும், அதிகப்படியான பயன்பாட்டினையும் தடுத்தல்.

iii. மறுபயன்பாடுள்ள வளங்களை மறுசுழற்சி செய்தல்.

iv. மாசைக் கட்டுப்படுத்துதல்.

v. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.

vi. இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாத்தல்.

vii. மாற்று வளங்களைப் பயன்படுத்துதல்.

வளங்களைப் பாதுகாக்க வேண்டுமெனில் மூன்று வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் அவைகள்,

1.குறைத்தல்,

2. மறுபயன்பாடு

3. மறுசுழற்சி செய்தல்

---

**3. வளத்திட்டமிடல் என்றால் என்ன ? அதன் அவசியம் என்ன ?**

அ) வளத்திட்டமிடுதல் என்பது வளங்களை சரியாக பயன்படுத்தும் திறன் ஆகும்.

ஆ) வளத்தினைத் திட்டமிடுதலின் அவசியம்.

i.வளங்கள் மிகவும் குறைவாக உள்ளன. வளத்திட்டமிடுதல் தற்போது வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், வருங்காலத் தலைமுறைகளுக்குச் சேமித்து வைக்கவும் உதவி புரிகிறது.

ii. வளங்கள் மிகக்குறைவாக இருப்பன மட்டுமன்று அவை புவியின் மீது ஒழுங்கற்றப் பரவலுடன் காணப்படுகின்றன.

iii. வளங்களை அதிகச் சுரண்டலில் இருந்து தடுத்துப் பாதுகாக்க வளத்திட்டமிடுதல் அவசியமாகும்.

---

**4. முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைச் செயல்பாடுகளை விவரி.**

**1. முதல்நிலைச் செயல்பாடுகள் :**

இயற்கை வளங்களைச் சேகரித்தல் முதல்நிலைச் செயல்பாடு எனப்படுகிறது.

எ.கா. பாலங்கள், வீடுகள், சாலைகள், வேட்டையாடுதல், உணவு சேகரித்தல்.

**2. இரண்டாம் நிலைச் செயல்பாடுகள் :**

மூலப்பொருள்களிலிருந்து வேறுபயன்பாட்டுப் பொருள்களாக மாற்றும் செயல்பாடு இரண்டாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.

இச்செயல்பாட்டிற்கு மனிதத்திறனும் அவனது சிந்தனைகளும் அடிப்படைத் தேவையாகும்.

TNPSCJOB



**3. மூன்றாம் நிலைச் செயல்பாடுகள் :**

முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலையில் கிடைக்கப்படும் பொருள்களைப் பகிர்வதற்கான போக்குவரத்து மற்றும் வணிக அமைப்பே மூன்றாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.

எ.கா. வங்கி, வணிகம் , தகவல் தொடர்புத்துறை.

இச்செயல்பாடுகளில் மனித வளம் பல்வேறு நிலைகளில் பயன்படுகிறது.

ஒரு நாட்டின் மனித வளம், அந்நாட்டில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தைச் சார்ந்துள்ளது.

**எ. வாக்கியமும் புரிதலும்**

**1. வாக்கியம் :** வெப்பமண்டலப் பகுதிகளில் அனல் மின்னாற்றலுக்குப் பதிலாக சூரிய ஒளி ஆற்றல் ஒரு சிறந்த மாற்று ஆகும்.

**புரிதல் 1 :** நிலக்கரியும் பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வருகிறது.

**புரிதல் 2 :** சூரிய ஆற்றல் என்றும் குறையாது.

**சரியான விடையைத் தேர்ந்தெடு.**

அ. புரிதல் 1 மட்டும் சரி.

ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

**விடை : ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.**

**2. வாக்கியம் :** வளங்களைப் பாதுகாக்காவிடில் மனித இனம் அழிந்து விடும்.

**புரிதல் 1 :** வளங்களைப் பாதுகாக்க வேண்டாம்.

**புரிதல் 2 :** வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடு.**

அ. புரிதல் 1 மட்டும் சரி.

ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

**விடை : ஆ. புரிதல் 2 மட்டும் சரி**

**3. வாக்கியம் :** மனிதன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்.

**புரிதல் 1 :** உணவு சேகரித்து வந்த மனிதனுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

**புரிதல் 2 :** மனிதன் சேகரித்த உணவு ஊட்டமிக்கதாக இல்லை.

**சரியான விடையைத் தேர்ந்தெடு.**

அ. புரிதல் 1 மட்டும் சரி.

ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

**விடை : இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**ஏ) வளங்களைப் பாதுகாக்க மூன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி என்ற சொற்களைச் சரியான இடத்தில் எழுதுக.**


**1.** நீ இளம் வயதில் பயன்படுத்திய மிதிவண்டியை உனது பக்கத்து வீட்டு குழந்தைக்குக் கொடுத்தல் .................... **விடை : மறுபயன்பாடு**

**2.** கழிப்பறையில் குறைவான நீரைப் பயன்படுத்துதல் ............... **விடை : குறைத்தல்**

**3.** பயன்படுத்திய நெகிழிப் பொருள்களை உருக்கிச் சாலை அமைத்தல் .................. **விடை : மறுசுழற்சி**

---

**ஐ) குறுக்கெழுத்துப் புதிர்.**



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | ய | ற் | கை | வ | ள | ங் | க | ள் | |
| 2 நி | லை | யா | ன | வ | ள | ர் | ச் | சி | 2 தி |
| 3 சூ | ரி | ய | ஆ | ற் | ற | ல் | | | மி |
| | | | | | | | | 1 தி | ங் |
| | | | | | | | | ட் | க |
| | | | | | | | | ட | ல |
| | | | | | | | | மி | ப் |
| | 4 இ | ய | ற் | கை | வ | ள | ம் | டு | பு |
| | | 5 நா | ட் | டு | வ | ள | ம் | த | னு |
| 6 உ | ள் | ளூ | ர் | வ | ள | ம் | | ல் | கு |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. எங்கும் காணப்படும் வளங்கள் – **இயற்கை வளங்கள்** | 1. வளங்களைப் பாதுகாக்கும் வழி முறைகளில் ஒன்று – **திட்டமிடுதல்** |
| 2. காலத்தைச் சமநிலையில் வைக்கும் வளர்ச்சி – **நிலையான வளர்ச்சி** | 2. இது ஒரு பன்னாட்டு வளம் – **திமிங்கலப் புனுகு** |
| 3. சூரியனிடமிருந்து பெறப்படும் ஆற்றல் – **சூரிய ஆற்றல்** | |
| 4. இயற்கையினால் அளிக்கப் படும் வளம் – **இயற்கைவளம்** | |
| 5. ஒரு நாட்டிற்குச் சொந்தமான வளங்கள் – **நாட்டு வளம்** | |
| 6. குறிப்பிட்ட இடங்களில் காணப்படும் வளம் – **உள்ளூர் வளம்** | |


---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB







ஓ) இந்தியப் புறவரி நிலவரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்.
1. நெய்வேலி 2. வங்காள விரிகுடா 3. அரபிக்கடல்
4. தமிழகக் காடுகள் 5. இந்தியப் பெருங்கடல்
6. சேலத்தில் உள்ள கஞ்சமலை இரும்புச் சுரங்கம்



TNPSCJOB
www.kalviexpress.in www.kalviexpress.in



**ஓ) கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பொருளாதாரச் செயல்பாடுகள் தொடர்பான படங்களை உற்றுநோக்கி அட்டவணையை நிரப்புக.**

| வ. எண். | படம் | முதல்நிலை / இரண்டாம் நிலை / மூன்றாம் நிலை | செயல்பாட்டின் பெயர் | காணப்படும் பகுதி |
|---|---|---|---|---|
| 1. |  | முதல்நிலை | நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் | நெய்வேலி |
| 2. |  | இரண்டாம் நிலை | சர்க்கரை ஆலை | அலங்கா நல்லூர் |
| 3. |  | மூன்றாம் நிலை | வங்கி | நகரங்கள் |
| 4. |  | இரண்டாம் நிலை | பதப்படுத்துதல் | நீலகிரி |

www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in
TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**ஔ) ஆசிரியர் செயல்பாடுகள்.**

**1. பள்ளி அல்லது வகுப்பளவில் மாதத்திற்கு ஒருநாள் “மின்சாரம் சேமித்தல் நாள் ” கொண்டாடுதல்.**

**2. பயன்பாடற்ற பொருள்களைக் கொண்டு பள்ளியின் நடைக்கூடச் சுவர்ப் பகுதியை அலங்கரிக்கவும்.**

**3. பள்ளியின் அருகில் உள்ள ஏதேனும் ஒரு தொழிற்சாலைக்குக் களப்பயணம் மேற்கொள்ளவும்.**

**4. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்கள் தொடர்பான படங்கள் சேகரிக்கச் செய்தல்.**

i.மீன்பிடித்தல்
ii. வேட்டையாடுதல்
iii. உணவு சேகரித்தல்
iv. காட்டு வளங்களைச் சேகரித்தல்
v. சுரங்கத் தொழில்
vi. விவசாயம்
vii. கால்நடை வளர்த்தல்
viii. மரங்களை வெட்டுதல்



i.மீன்பிடித்தல்



ii. வேட்டையாடுதல்



iii. உணவு சேகரித்தல்




iv. காட்டு வளங்களைச் சேகரித்தல்



v. சுரங்கத் தொழில்



vi. விவசாயம்



vii. கால்நடை வளர்த்தல்



viii. மரங்களை வெட்டுதல்

TNPSCJOB



## குடிமையியல்

## அலகு 1. தேசிய சின்னங்கள்

### பயிற்சிகள்

**I. சரியான விடையை தேர்வு செய்க.**

**1. தேசியப் பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் .................**

அ) பிங்காலி வெங்கையா ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) காந்திஜி

**விடை : இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி**

**2. இந்தியாவின் தேசியக் கீதம் ................**

அ) ஜன கண மன ஆ) வந்தே மாதரம்

இ) அமர் சோனார் பாங்கலே ஈ) நீராடுங் கடலுடுத்த

**விடை : அ) ஜன கண மன**

**3. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் .............**

அ) அக்பர் ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) ஜவஹர்லால் நேரு

**விடை : இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி**

**4. ............... பிறந்த நாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்.**

அ) மகாத்மா காந்தி ஆ) சுபாஷ்சந்திர போஸ்

இ) சர்தார் வல்லபாய்பட்டேல் ஈ) ஜவஹர்லால் நேரு

**விடை : அ) மகாத்மா காந்தி**

**5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் ............**

அ) வெளிர்நீலம் ஆ) கருநீலம்

இ) நீலம் ஈ) பச்சை

**விடை : ஆ) கருநீலம்**

**6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக் கொடி .................. அருங்காட்சியத்தில் உள்ளது.**

அ) சென்னை கோட்டை ஆ) டெல்லி

இ) சாரநாத் ஈ) கொல்கத்தா

**விடை : அ) சென்னை கோட்டை**

**7. தேசியக் கீதத்தை இயற்றியவர் .................**

அ) தேவேந்திரநாத் தாகூர் ஆ) பாரதியார்

இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) பாலகங்காதர திலகர்

**விடை : இ) ரவீந்திரநாத் தாகூர்**

**8. தேசியக் கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு .............**

அ) 50 வினாடிகள் ஆ) 52 நிமிடங்கள்

இ) 52 வினாடிகள் ஈ) 20 வினாடிகள்

**விடை: இ) 52 வினாடிகள்**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர் .............**

அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஆ) ரவீந்திரநாத் தாகூர்
இ) மகாத்மா காந்தி ஈ) சரோஜினி நாயுடு

**விடை : அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி**

**10. விடுதலை நாளின்போது டெல்லியில் கொடியேற்றுபவர் .............**

அ) பிரதம அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர்
இ) துணைக் குடியரசுத் தலைவர் ஈ) அரசியல் தலைவர் எவரேனும்

**விடை : அ) பிரதம அமைச்சர்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்திய தேசிய இலச்சினை ................. ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. **விடை : உச்சியில்**
2. இந்தியாவின் தேசியக் கனி .................. **விடை : மாம்பழம்**
3. இந்தியாவின் தேசியப் பறவை ................. **விடை : மயில்**
4. இந்தியாவில் தேசிய மரம் ................. **விடை : ஆலமரம்**
5. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்டக் கொடி ............ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது. **விடை : குடியாத்தம்**
6. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் ................. **விடை : பிங்காலி வெங்கையா**
7. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் ......... **விடை : கனிஷ்கர்**
8. இந்தியாவின் மிக நீளமான ஆறு ................ **விடை : கங்கை**
9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் ............... **விடை: டி. உதயகுமார்**
10. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் .............. ஆரங்களைக் கொண்டது. **விடை : 24**

**III. சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. நான்முகச் சிங்கம் தற்போது ................ அருங்காட்சியகத்தில் உள்ளது. (கொல்கத்தா / சாரநாத்) **விடை : சாரநாத்**
2. தேசியக் கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு ............... (1950 / 1947) **விடை : 1950**
3. ................. இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (லாக்டோ பேசில்லஸ் / ரைசோபியம்) **விடை : லாக்டோபேசில்லஸ்**

**IV. நிரப்புக.**

1. காவி – தைரியம் ; வெள்ளை – .................. **விடை : நேர்மை**
2. குதிரை – ஆற்றல் ; காளை – .................. **விடை : உழைப்பு**
3. 1947 – விடுதலைநாள் ; 1950 – .................. **விடை : குடியரசு நாள்**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**V. பொருந்தியுள்ளவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ரவீந்திரநாத் தாகூர் – அ. தேசியப்பாடல்
2. பங்கிம் சந்திர சட்டர்ஜி – ஆ. தேசியக்கொடி
3. பிங்காலி வெங்கையா – இ. வான் இயற்பியலாளர்
4. மேக்னாத் சாகா – ஈ. தேசிய கீதம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | அ | ஈ | ஆ | இ |
| ஆ) | ஈ | அ | இ | ஆ |
| இ) | ஈ | அ | ஆ | இ |

**விடை :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| **இ)** | **ஈ** | **அ** | **ஆ** | **இ** |

**VI. பொருத்தியபின் பொருந்தாதது எது ?**

1. தேசிய ஊர்வன – புலி
2. தேசிய நீர்வாழ் விலங்கு – லாக்டோ பேசில்லஸ்
3. தேசிய பாரம்பரிய விலங்கு – ராஜநாகம்
4. தேசிய நுண்ணுயிரி – டால்பின்

**விடை : பொருந்தாதது**
**தேசிய நுண்ணுயிரி – லாக்டோ பேசில்லஸ்**

**VII. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. அ. தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் உள்ளது.
ஆ. அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டது.
இ. அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.
**விடை : இ) அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.**

2. அ. பிங்காலி வெங்கையா தேசியக் கொடியை வடிவமைத்தார்.
ஆ. விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.
இ. விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக்கொடி குடியாத்தத்தில் நெசவு செய்யப்பட்டது.
**விடை : தவறான சொற்றொடர் : ஆ. விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.**

**VIII. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.
2. நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது.
3. அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

**விடை : சரியான சொற்றொடர் : 1. ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**IX. விடையளிக்கவும்.**

**1. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை ?**



★ தேசியக் கொடியின் மேல்பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது.

★ கீழ்ப்பகுதியில் உள்ள பச்சை நிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது.

★ இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது.

★ நடுவில் கருநீல நிறத்தில் அமைந்துள்ள அசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

**2. தேசிய இலச்சினையின் பாகங்கள் யாவை ?**



★ தேசிய இலச்சினையின் மேல்பகுதியில் நான்கு சிங்க உருவங்கள் ஒன்றுக்கொன்று பின்பக்கமாக பொருத்தியிருக்குமாறு வட்டவடிமான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

★ நமது இலச்சினையில் மூன்று சிங்க உருவங்களை மட்டுமே காண இயலும்.

★ அடிப்பகுதியில் யானை, குதிரை, காளை, சிங்கம் ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்ம சக்கரம் அமைந்துள்ளது.

**3. தேசியக் கீதத்தின் சிறப்பு அம்சங்கள் எவை ?**

**தேசிய கீதத்தின் சிறப்பு அம்சங்கள் :**

★ ‘ஜன கண மன .... ’ நமது தேசிய கீதமாகும்.

★ இது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைபாட்டிற்கு அடையாளச் சின்னமாக விளங்குகிறது.

★ இப்பாடல் இரவீந்திரநாத் தாகூரால் வங்காள மொழியில் எழுதப்பட்டது.

★ இதன் இந்தி மொழியாக்கம் ஜனவரி 24, 1950 இல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**பாடும்போது பின்பற்ற வேண்டியன :**

★ இக்கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட / இசைக்க வேண்டும்.

★ பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும்.

★ பொருள் புரிந்து சரியாகப் பாடவேண்டும்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்.**

★ இந்தியாவின் அதிகாரபூர்வ பணத்தின் பெயர் ரூபாய். 16 – ம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்துக்கு 'ருபியா' என்று பெயர்.

★ அதுவே ரூபாய் என்று மருவியுள்ளது.

★ **ரூபாய்க்கான சின்னம் ₹**

★ இந்தச் சின்னத்தை 2010 – ல் வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி. உதயகுமார்.

---

**5. தேசிய இலச்சினை எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது ?**

தேசிய இலச்சினை இந்திய அரசின் அலுவல் முறை கடித முகப்புகளிலும், இந்திய நாணயங்களிலும் கடவு சீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

---

**6. தேசிய உறுதி மொழியை எழுதியவர் யார் ?**

நமது தேசிய உறுதிமொழியை எழுதியவர் பிதிமாரி வெங்கட சுப்பாராவ் ஆவார்.

---

**7. தேசிய இலச்சினையின் அடிபாகத்தில் இடம் பெற்றுள்ள விலங்குகள் எவை ?**

| | |
|---|---|
| 1. யானை | 2. குதிரை |
| 3. காளை | 4. சிங்கம் |

---

**8. இயற்கை தேசியச் சின்னங்கள் எவை ?**

| | |
|---|---|
| 1. ஆலமரம் | 2. மயில் |
| 3. தாமரை | 4. புலி |
| 5. கங்கை ஆறு | 6. யானை |
| 7. ஆற்று ஓங்கில் | 8. ராஜநாகம் |
| 9. லாக்டோ பேசில்லஸ் | 10. மாம்பழம் |

---

**9. மயில்கள் சரணாலயம் எங்குள்ளது ?**

மயில்கள் சரணாலயம் தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலையில் உள்ளது.

---

**X. செயல்பாடுகள்.**

**இயற்கை தேசியச் சின்னங்களைக் காட்சிப்படமாக வரைக / கதை உருவாக்குக.**

**இயற்கை தேசியச் சின்னங்கள்**

**ஆலமரம் – 1950**



இது பெருமையின் சின்னமாகும். மருத்துவ குணம் கொண்டது.

TNPSCJOB





**மயில் – 1963**

இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது. தோகையைக் கொண்ட பறவை மயில்.



**கங்கை ஆறு – 2008**

இது வற்றாத ஆறு. வரலாற்றுப் புகழ் பெற்ற தலைநகரங்கள் இவ்வாற்றங்கரையில் தோன்றி செழித்தோங்கின.



**ஆற்று ஓங்கில் – 2010**

தான் வாழும் ஆற்றின் சூழல் அமைவின் நிலையை உணர்த்தும் கருவியாக செயல்படுகிறது. அருகி வரும் உயிரினமாக உள்ளது.



**ராஜநாகம்**

(ஹோஃபிபாகஸ் ஹானா) உலகின் நீண்ட விஷம் நிறைந்த பாம்பு. இவை இந்தியாவின் மழைக்காடுகள் மற்றும் சமவெளிகளில் வாழ்கின்றன.



**தாமரை – 1950**

சேற்று நீரில் வளர்ந்தாலும் மிக அழகான மலர்கள் மலர்கின்றன.




**புலி – 1973**

பூனை இனத்தில் மிகப்பெரியது உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70 % கொண்டுள்ளது.



**யானை – 2010**

ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.



**லாக்டோ பேசில்லஸ் – 2012**

இது ஒரு தோழமை பாக்டீரியா. இது லேக்டிக் மற்றும் பாக்டீரியாக்களின் குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறது.



**மாம்பழம் – 1950**

வைட்டமின் ஏ, சி, டி யை அதிக அளவில் கொண்டது. பெரும்பாலும் சமவெளிகளில் விளைவிக்கப்படுகிறது.

**உன் வகுப்பு / பள்ளிக்கான அடையாளக் குறியீட்டை ( Logo ) உருவாக்குக.**

EDUCATION
LOGO

LOGO NAME
SLOGAN HERE

TNPSCJOB



**★ அறுகி வரும் உயிரினங்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும். கலந்துரையாடுக.**

**முகிலன் :** நண்பா.... அறுகி வரும் உயிரினங்கள் பற்றித் தெரியுமா ?
**மனோஜ் :** தெரியும்.
**கார்த்திக் :** விலங்குகளில் புலி, யானை...
**முகிலன் :** விலங்குகள் மட்டும் தான் அறுகி வருகிறதா நண்பா....
**மனோஜ் :** இல்லை. பறவையினங்களும் கூட இன்று அறுகி வருகின்றன.
**கார்த்திக் :** பறவையினங்களுள் எண்ணற்றவை அறுகிவிட்டன. அவற்றுள் மயில், குருவி இனங்கள் குறிப்பிடத்தக்கவை.
**முகிலன் :** அப்படியா நண்பா.... இதற்குக் காரணம் என்ன ?
**மனோஜ் :** காடுகளை அளிப்பதால் விலங்குகளின் வாழ்விடம் அழிகிறது. தொலை தொடர்பு நிறுவனங்களின் கோபுரத்திலிருந்து வெளிவரும் கதிர்வீச்சால் பறவையினங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.
**முகிலன் :** இவற்றைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும் நண்பா...
**கார்த்திக் :** காடுகளை அழிக்காமல் பாதுகாப்பதும், கதிர்வீச்சுகளை கட்டுக்குள் கொண்டு வருவதுமே இதற்கான தீர்வாகும்.
**மனோஜ் :** நல்ல கருத்து, நன்றி நண்பா.....

---

**★ பள்ளியில் நடைபெற்ற தேசிய விழா / நிகழ்வு குறித்து உள்ளூர் செய்த்தாளுக்குச் செய்தி அறிக்கை தயாரிக்கவும்.**

பெறுநர்

உயர்திரு. பதிப்பாசிரியர் அவர்கள்
இந்து தமிழ் நாளிதழ்
மதுரை

அன்புடையீர்

**பொருள் :** எங்கள் பள்ளியில் நடைபெற்ற தேசிய விழாவான சுதந்திர தின விழா நிகழ்ச்சியை தங்களின் நாளிதழில், செய்தியாக வெளியிடுவது சார்பாக..

வணக்கம்,

............... அன்று எங்கள் பள்ளியில் சுதந்திர தின விழா இனிதே கொண்டாடப்பட்டது. விழா இறைவணக்கத்துடன் தொடங்கியது. பள்ளியின் தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார். பள்ளி செயலாளர் முன்னிலை வகித்தார். தலைமையாசிரியர் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் சுதந்திர தின விழா குறித்த செய்திகளை மாணவர்கள் உணரும் வண்ணம் உரையாற்றினார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பரிசும், இனிப்பும் வழங்கினார். தமிழாசிரியர் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

இச்செய்தியை தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பள்ளி நிர்வாகம்

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**XI. வாழ்வியல் திறன்.**

**★ குறிப்பிட்ட சில உயிரினங்களை மட்டும் தேசியச் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதன் காரணங்களை ஆய்க.**

**மயில் –** இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது. தோகையைக் கொண்ட பறவை மயில்.

**ஆற்று ஓங்கில் –** தான் வாழும் ஆற்றின் சூழல் அமைவின் நிலையை உணர்த்தும் கருவியாக செயல்படுகிறது. அருகி வரும் உயிரினமாக உள்ளது.

**ராஜநாகம் –** (ஹோஃபிபாகஸ் ஹானா ) உலகின் நீண்ட விஷம் நிறைந்த பாம்பு. இவை இந்தியாவின் மழைக்காடுகள் மற்றும் சமவெளிகளில் வாழ்கின்றன.

**புலி –** பூனை இனத்தில் மிகப்பெரியது உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70 % கொண்டுள்ளது.

**யானை –** ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**லாக்டோ பேசில்லஸ் –** இது ஒரு தோழமை பாக்டீரியா. இது லேக்டிக் மற்றும் பாக்டீரியாக்களின் குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறது.

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள் :

3 முதல் 10

வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்(TM & EM)

சமூக அறிவியல்

அன்பு நிலையம்

15, புதுமண்டபம் மதுரை – 625001